# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2196/22 - 2020 ඔක්තෝබර් මස 06 වැනි අඟහරුවාදා - 2020.10.06

*2196/22 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்***

***2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) 7ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்***

*2020, ஏப்பிறல் மாதம் 8 ஆந் திகதியிடப்பட்ட இல. 2170/4 ஐக் கொண்ட அரசாங்க அதிவிசேஷட வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் 2020, யூலை மாதம் 01 ஆந் திகதியிடப்பட்ட இல. 2182/32 ஐக் கொண்ட அரசாங்க அதிவிசேஷட வர்த்தமானி அறிவித்தல்கள் (ஒழுங்குவிதிகள்) என்பனவற்றில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்குப் புறம்பாக, ஒழுங்குவிதிகளின் கீழ் சிறப்பு வைப்புக் கணக்குகளாக திறக்கப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளை முதிர்ச்சி தொடர்பான குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு அப்பால் தொடர்ந்தும் பேணுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.*

*முதிர்ச்சித் திகதிக்கு அப்பால் அவ்வாறு பேணப்படும் சிறப்பு வைப்புக் கணக்குகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் சாதாரண தவணை வைப்புகளுக்கு வழங்கும் வட்டி வீதங்களுக்கு மாத்திரமே தகைமையுடையனவாக இருக்கும் என்பதுடன் அத்தகைய சிறப்பு வைப்புக் கணக்குகளில் வைத்திருக்கப்படும் நிதியத்தினை தவணை வைப்புக்கள் முதிர்ச்சியடைகின்றமையினைத் தொடர்ந்து எவ்வித கட்டுப்பாடுமின்றி மாற்றவும் வெளிநாடுகளுக்கு அனுப்பவும் முடியும்.*

***மஹிந்த ராஜபக்ஷ,***
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு,*
*2020, ஒற்றோபர் 06.*

*10 - 1032*